

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நீலகிரி மாவட்டம் கோத்தகிரி காந்தி மைதானத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன் ரூ3.81கோடி மதிப்பிலான பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் பயனாளிகளுக்கு நலத்திட்டங்களை வழங்கினார். உடன் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா,அரசு அதிகாரிகள் மற்றும் கழக நிர்வாகிகள் உடன் உள்ளனர்.

# திருவண்ணாமலைக்கு 100 சிறப்பு பேருந்துகள்!

## திண்டுக்கல்லில் ஏற்பாடு!

திண்டுக்கல், நவ.25-

திருவண்ணாமலை திரு கார்த்திகை தீபவிழா 26.11.2023 அன்று நடைபெறுவதை முன்னிட்டு பக்தர்கள் மற்றும் பொது மக்கள் வசதிக்காக தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிட்.,திண்டுக்கல் மூலம் 25.11.2023 முதல் 27.11.2023 வரை இரவும், பகலும் திண்டுக்கல், தேனி, மற்றும் பழனி ஆகிய இடங்களிலிருந்து திருவண்ணாமலைக்கு 100 சிறப்பு பேருந்துகள் இயக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் திருவண்ணாமலைக்குச் செல்லும் பக்தர்களின் பயணத்திற்காக மேற்கண்ட பேருந்து நிலையங்களில் பக்தர்களுக்கு உதவவும், வழிகாட்டவும் அதிகாரிகள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்பதை பொது மேலாளர் தெரிவித்துக்கொள்கிறார்.



இந்திய ஒன்றியத்திலேயே முதல் முறையாக இரவு நேர ஃபார்முலா ரேசிங் சர்க்யூட் போட்டிகள் சென்னையில் வரும் டிசம்பர் 9 மற்றும் 10 ஆம் தேதிகளில் நடைபெறவுள்ளன. 3.7 கி.மீ. தூரத்திலான இப்போட்டிகளுக்குரிய ஓடுதளம் அமைக்கும் பணி உள்ளிட்ட முன்னேற்பாடுகளை சென்னை தீவுத்திடலை ஒட்டிய பகுதிகளில் அதிகாரிகள் அலுவலர்களுடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

### கடலூர் கிழக்கு மாவட்டத்திற்கு இளைஞர் அணியின்

# 2 சக்கர வாகன பிரச்சாரப் பேரணி வருகை!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வாழ்த்து!

கடலூர், நவ. 25-

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டு மற்றும் சிறப்பு செயலாக்க திட்டத்துறை அமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின் படி வருகின்ற 17.12.2023 அன்று சேலத்தில் நடைபெறும் திமு.க. இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டிற்கு, அழைப்பு விடுத்து, இருசக்கர வாகன பிரச்சார பயணம், கடலூர் கிழக்கு மாவட்டத்திற்கு 23.11.2023, வியாழக்கிழமை, காலை 11.30 மணியளவில், கொள்ளிடம் வழியாக கடலூர் கிழக்கு மாவட்டத்திற்கு வந்தடைந்தனர்.

அங்கு மாவட்டக் கழக பொருளாளர் எம்.ஆர். கே.பி.கதிரவன் தலைமையில் வல்லம்படுகையில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. குமராட்சி மத்திய மற்றும் மேற்கு ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

உசுப்பூர் மாரியப்ப நகர் வழியாக குமராட்சி கிழக்கு ஒன்றியம் அண்ணாமலை நகர் நிர்வாகிகள் வரவேற்பு அளித்தனர். பகல் 1.30 மணியளவில், எஸ்.பி.கோவில் தெரு வழியாக, சிதம்பரம் தெற்கு வீதியில் நகர கழகச் செயலாளர் கே.ஆர்.செந்தில்குமார் தலைமையில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. கஞ்சித் தொட்டி வழியாக வண்டிகேட் பகுதியில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சரும், மாவட்டக் கழக செயலாளருமான எம்.ஆர். கே.பன்னீர்செல்வம் கலைஞர் மண்டல இருசக்கர வாகன பிரச்சார பயண குழுவினரை சந்தித்து பயணம் வெற்றியடைய வாழ்த்துத் தெரிவித்தார்.

பரங்கிப்பேட்டை தெற்கு, வடக்கு ஒன்றியங்கள், பரங்கிப்பேட்டை மற்றும் கிள்ளை பேரூர் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது. மணலூர் வழியாக கீரப்பாளையம் நான்கு ரோட்டில் கிழக்கு, மேற்கு ஒன்றியங்கள் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது. புவனகிரி வெள்ளாற்று பாலம் வழியாக, கடை வீதியில் புவனகிரி கிழக்கு ஒன்றியம், பேரூர் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

மஞ்சக்கொல்லை மிராளூர் வழியாக, சேத்தியாதோப்பு கூட்ரோடு பகுதியில் கம்மாபுரம் தெற்கு ஒன்றியம், கம்மாபுரம் வடக்கு ஒன்றியம், கம்மாபுரம் மத்திய ஒன்றியம்,திருமுட்டம் வடக்கு ஒன்றியம், கெங்கைகொண்டான் பேரூர் நிர்வாகிகள் வரவேற்பு அளித்தனர்.

எம்.ஆர்.கே. சர்க்கரை ஆலை வழியாக சேத்தியாதோப்பு கடை வீதியில் புவனகிரி மேற்கு ஒன்றியம்,

சேத்தியாதோப்பு பேரூர் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது. கந்தகுமாரன் வழியாக லால்பேட்டை கடை வீதியில் குமராட்சி வடக்கு ஒன்றியம்,

குமராட்சி தெற்கு ஒன்றியம், லால்பேட்டை பேரூர் சார்பாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

லால்பேட்டை பேரூர், காட்டுமன்னார்கோவில் ஊராட்சி ஒன்றியம் வழியாக, காட்டுமன்னார்கோவில் கடை வீதியில் காட்டுமன்னார்கோவில் கிழக்கு ஒன்றியம், காட்டுமன்னார்கோவில் மேற்கு ஒன்றியம், திருமுட்டம் கிழக்கு ஒன்றியம், திருமுட்டம் மேற்கு ஒன்றியம், திருமுட்டம் பேரூர் சார்பாக உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் ஒன்றிய கழக செயலாளர்கள் அ.முத்துசாமி, ப.இராமலிங்கம், தங்க.ஆனந்தன், கே.ஆர். ராயர், ஏ.எஸ்.மதியழகன், முத்து.பெருமாள், ஆர். கலையரசன், கே.ஆர்.கே. கோவிந்தராஜ், எஸ்.செந்தில்குமார், எம்.மனோகரன், , வி.ஜி.பி.சபாநாயகம், டி.திருமூர்த்தி, வி.கோவிந்தசாமி, த.சங்கர், எம். சோழன், வி.ஆர்.ராஜேந்திகுமார், நடராஜன், இரா. கலையரசன், கே.ஆர்.தனஞ்செயன், இர.விஜய சுந்தரம்,

பேரூர் கழக செயலாளர்கள் த.கந்தன், ப.மனோகரன், எஸ்.கணேசமூர்த்தி, ஏ.ஆர்.முனவர் ஹுசேன், க.பழனி, ஜெ.அன்வர் சதாத், பூ.செல்வகுமார், பொதுக்குழு உறுப்பினர் கே.பி.ஆர்.பாலமுருகன்,

மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜி.கார்த்திகேயன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் அப்பு.சத்தியநாராயணன்,

மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் அப்பு. சந்திரசேகரன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ஜாபர் அலி, அயலக அணி அமைப்பாளர் வாசு,

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஏ.எம்.மதியழகன், ஜி.முத்துகுமார், கே.மணிகண்டன், கே.ஜெகன், வி.ஜே.அன்பழகன், டி.பிரபு உள்ளிட்ட கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### பிற்படுத்தப்பட்டோர் - மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை சார்பில்

# ஆர்.கே.நகர் தொகுதியில் மாணவர்களுக்கு ரூ.264.10 கோடி மதிப்பிலான மிதிவண்டிகள்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கி துவக்கி வைத்தார்!

சென்னை, நவ.25-

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படு த்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் ரூ.264.10 கோடி மதிப்பில் 11ஆம் வகுப்பு பயிலும் 5,47,676 மாணவ/மாணவியருக்கு மிதிவண்டிகளை வழங்கினார்.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு:-

தமிழ்நாடு அரசால் மேல்நிலைக் கல்வி பயிலும் மாணவ, மாணவியர் சிரமமின்றி பள்ளிக்கு செல்லும் வகையில் தமிழ்நாட்டில் உள்ள அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் பகுதியாக அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 11ஆம் வகுப்பு பயிலும் அனைத்து மாணவ, மாணவியருக்கும் பிற்படு த்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன.

2023-2024ஆம் கல்வியாண்டில் தமிழ்நாட்டில் உள்ள அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் பகுதியாக அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் 11ஆம் வகுப்பு பயிலும் மாணவ - மாணவியருக்கு மிதிவண்டிகள் வழங்கும் விழா சென்னை தண்டையார்பேட்டை பட்டேல் நகரில் அமைந்துள்ள சென்னை மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நேற்று (24.11.2023) நடைபெற்றது.

இந்த விழாவில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிற்படு த்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் ரூ.264.10 கோடி மதிப்பில் 11ஆம் வகுப்பு பயிலும் 5,47,676 மாணவ, மாணவியருக்கு மிதிவண்டி கள் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைக்கும் அடையாளமாக 10 மாணவ, மாணவியருக்கு மிதிவண்டிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் , இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு , சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் , மேயர் திருமதி ஆர்.பிரியா , வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி , சட்டமன்ற உறுப்பினர்கள் ஜே.ஜே.எபினேசர் (ஆர்.கே.நகர்) , ஆர்.டி.சேகர் (பெரம்பூர்) , ஐட்ரீம் ஆர்.மூர்த்தி (இராயபுரம்) , துணை மேயர் மு.மகேஷ்குமார் , கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர், வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் இருசக்கர வாகனப் பேரணியை துவக்கி வைக்கிறார்!

# சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் திரளாகப் பங்கேற்பீர்!

## மாவட்ட அமைப்பாளர் ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ. அறிக்கை!

சென்னை. நவ. 25

சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.எம்.வி.பிரபாகர்ராஜாஎம்.எல்ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கழக இளைஞர் அணிச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சேலத்தில் நடைபெறும் கழக இளைஞர் அணி 2 வது மாநில மாநாடு மாநில உரிமைகளை மீட்டெடுக்க இருசக்கர வாகனப் பேரணியை கன்னியாகுமரியில் தொடங்கி வைத்ததை தொடர்ந்து, கழக இளைஞர் அணியினர் பங்கேற்றும் இருசக்கர வாகனப் பேரணி இன்று (25.11.2023 சனிக்கிழமை) சென்னை தெற்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து தொகுதிகளிலும் மேற் கொள்ளப்படுகிறது.

இந்நிகழ்ச்சியினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், மாவட்டக் கழகச் செயலாளர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்து சிறப்பிக்கிறார்.

எனவே சென்னை தெற்கு மாவட்டத்துக்கு உட்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அவர்களின் தொகுதியில் பெரும் அளவில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கீழ்க்கண்ட அட்டவணைப்படி நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது.

1, பகல் 12.00 மணி அளவில் சோழிங்கநல்லூர் ஜெ.பி.ஆர். கல்லூரி அருகில் சோழிங்கநல்லூர் தொகுதி சார்பில் வரவேற்பு,

2, மதியம் 2.00 மணி அளவில் பெருங்குடி திருமலை நகர் பகுதியில் நீட் தேர்வு கையெழுத்து இயக்கம் பொதுமக்களிடத்தில் கையெழுத்து பெறுதல்,

3, மதியம் 2:30 மணி அளவில் வேளச்சேரி தரமணி சாலையில் வேளச்சேரி தொகுதி சார்பில் வாகனப் பேரணி வரவேற்பு,

4, மதியம் 2.45 மணி அளவில் வேளச்சேரி காந்தி சாலை பகுதியில் நீட் தேர்வு எதிர்ப்பு கையெழுத்து இயக்கம்,

5, மாலை 3.00 மணி அளவில் சைதாப்பேட்டை கலைஞர் நூற்றாண்டு வளைவு அருகில் சைதாப்பேட்டை தொகுதி சார்பில் வரவேற்பு,

6, மாலை 3.15 மணி அளவில் சைதாப்பேட்டை மார்க்கெட் பகுதியில் நீட் தேர்வு எதிர்ப்பு பொதுமக்கள் இடத்தில் கையெழுத்து பெறுதல்.

இறுதியாய் அண்ணா நூற்றாண்டு நூலகம் வழியாக அன்பகத்தில் நிறைவு செய்யப்படுகிறது.

இவ்வாறு சென்னை தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு!

# கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழகத்தினர் தீவிரமாக ஈடுபடுவீர்!

## கழகத்தினருக்கு தா.உதயசூரியன் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

கள்ளக்குறிச்சி, நவ.25-

வாக்காளர் பட்டியல் சரி பார்க்கும் பணியில் கள்ளக் குறிச்சி வடக்கு மாவட்ட கழகத்தினர் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு விடுபட்ட மற்றும் புதிய வாக்காளர்களை சேர்த்திட வேண்டுமென கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழக செயலாளர், தா.உதயசூரியன் எம். எல்.ஏ அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

01.01.2024 தேதியை தகுதியேற்படுத்தும் நாளாக கொண்டு வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்திட வரைவு வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் 27.10.2023 அன்று வெளியிட்டுள்ளது. 27.10.2023 முதல் 09.12.2023 வரை புதிய வாக்காளர்களை சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும், திருத்தம் செய்யவும் மனு செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.



இது தவிர 25.11.2023 (சனிக்கிழமை), 26.11.2023 (ஞாயிற்றுக்கிழமை), ஆகிய இரண்டு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட மையங்களில் சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளன.

மாறிய இந்நாட்களில் விடுபட்ட வாக்காளர்களும், இடம் வாக்காளர்களும் 01.01.2024 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று பூர்த்தி செய்து அந்த படிவங்களை அந்தந்த முகாம்களில் கொடுக்க வேண்டும்.

17வயது நிரம்பிய வர்களும், உரிய ஆவணங்களோடு விண்ணப்பிக்கலாம். அவர்கள் 18வயது நிரம்பும்போது வாக்காளர் பட்டியலில் இடம்பெற இந்திய தேர்தல் ஆணையம் ஏற்பாடு செய்திருக்கிறது.

இதன் அடிப்படையில் 2024 ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும் புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்காளர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும். தொகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள மேற்கண்ட அட்டவணையின் படி சிறப்பு முகாம்கள் நடைபெறவிருக்கும் நாட்களில், நமது கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டத்தில் உள்ள சங்கராபுரம், உளுந்தூர்பேட்டை தொகுதிகளுக்குட்பட்ட வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2) உடன் ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் தங்களை முழுமையாக இப்பணியில் ஈடுபடுத்திட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.



தாம்பரம் நகரக் கழகத்தின் மூத்த முன்னோடியும் முன்னாள் நகர இளைஞரணி அமைப்பாளரும் முன்னாள் நகர மன்ற உறுப்பினரும் பழைய 10வது வட்ட செயலாளருமான பி.பாரதி நேற்று காலையில் மருந்துவமனையில் இயற்கை அடைந்தார். தகவலறிந்து தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. தலைமையில் பகுதி கழக செயலாளர்கள் டி. காமராஜ், எஸ். இந்திரன், மாநகரக் கழக நிர்வாகிகளும் இன்நாள் முன்னாள் உள்ளாட்சி பிரிதிநிதிகளும் அன்னாரின் உடலுக்கு கழக கொடியை போர்த்தியும் மாலை வைத்தும் ஆஞ்சலி செலுத்தினார்கள்.

### திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் நடைபெறும்

# சிறப்பு வாக்காளர் பட்டியல் சரி பார்க்கும் முகாம்களின் பொறுப்பாளர்கள் நியமனம்!

## மாவட்ட கழக செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



தமிழக முதல்வர், கழக தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, திருவள்ளூர் மத்திய மாவட்டம், ஆவடி மற்றும் பூவிருந்தவல்லி சட்டமன்றத் தொகுதிகளுக்கு உட்பட்ட 823 பாகங்களுக்கும் சிறப்பு முகாம் வருகிற நவம்பர் 25-26 ஆகிய தேதிகளில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கல் மற்றும் இடமாற்றம் குறித்து நடைபெறவுள்ளது. இச்சிறப்பு முகாமில் கீழ்க்கண்ட மாவட்ட நிர்வாகிகள் பொறுப்பாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள்.

**ஆவடி சட்டமன்றத் தொகுதி**

| கழக நிர்வாகம் | பூத் | மாவட்ட நிர்வாகிகள் | வழக்கறிஞர் |
|---|---|---|---|
| ஆவடி கிழக்கு | 75 | மா. ராஜி | எம்.கார்த்திக் |
| ஆவடி மேற்கு | 77 | எஸ்.ஜெயபாலன் | ரமேஷ் |
| ஆவடி வடக்கு | 77 | கே.ஜி.ரமேஷ் | அகஸ்டின் |
| ஆவடி தெற்கு | 72 | வி.ஜெ.சீனிவாசன் | வெ.கார்த்திக் |
| திருவேற்காடு | 77 | த.எத்திராஜ் | ராஜ்குமார் |
| திருநின்றவூர் | 40 | ப.நரேஷ்குமார் | புனிதவராஜன் |
| பூவிருந்தவல்லி மேற்கு ஒன்றியம் | 18 | சி.ஜெரால்டு | என்.பி.மாரிமுத்து |

**பூவிருந்தவல்லி சட்டமன்றத் தொகுதி**

| கழக நிர்வாகம் | பூத் | மாவட்ட நிர்வாகிகள் | வழக்கறிஞர் |
|---|---|---|---|
| பூவிருந்தவல்லி நகரம் | 57 | கே.ஜெ.ரமேஷ் | எஸ்.ராஜேந்திரன் |
| பூவிருந்தவல்லி மேற்கு ஒன்றியம் | 31 | சி.ஜெரால்டு | என்.பி.மாரிமுத்து |
| பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியம் | 96 | எம்.முத்தமிழ் செல்வன் | பாஸ்முருகன் |
| திருவள்ளூர் கிழக்கு ஒன்றியம் | 68 | காஞ்சனா சுதாகர் | கே.ஜி.அன்பு |
| திருவள்ளூர் மேற்கு ஒன்றியம் | 55 | வி.குமார் | பெ.வினோத் |
| திருவள்ளூர் வடக்கு ஒன்றியம் | 35 | ஜெ.மகாதேவன் | செந்தில்குமார் |
| எல்லாபுரம் மத்திய ஒன்றியம் | 26 | காயத்திரி ஸ்ரீதர் | துரை பழனி |
| திருமழிசை பேரூர் | 19 | ஜி.விமல்வர்சன் | பி.கே.இ.நாகராஜ் |

மேற்கண்ட பொறுப்பாளர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் மாநகர, ஒன்றிய, பகுதி, நகர, பேரூர் செயலாளர்களுடன் இணைந்து இந்நாட்களில் வாக்காளர் பட்டியல் பெயர் சேர்த்தல், நீக்கல், சரிபார்ப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும். சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்களில் (திருவள்ளூர் மத்திய மாவட்ட செயலாளர் சா.மு. நாசர் எம்.எல்.ஏ) எனது தலைமையில், ஆவடி தொகுதி பொறுப்பாளர் ஆர். டி.இ.ஆதிசேசன் மற்றும் பூவிருந்தவல்லி தொகுதி பொறுப்பாளர் வழக்கறிஞர் பழ.கணேசன் உள்ளிட்டோர் இணைந்து திருவள்ளூர் மத்திய மாவட்டம் முழுவதும் சிறப்பு முகாம்களில் ஆய்வு மேற்கொள்வர் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆவடி சா.மு.நாசர்,**

செயலாளர், திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.